# குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 1 நீதிமன்றம், கரூர்.

**முன்னிலை:-** திரு.எஸ்.பி. பரத்குமார் எம்.பி.ஏ., எல்.எல்.எம்.,
நீதித்துறை நடுவர் எண்.1,கரூர்.

தமிழ் விசுவாவசு வருடம், மாசி மாதம் 25 ஆம் நாள்,
2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள், திங்கள்கிழமை,

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 200/2022**

| | | | |
|---|---|---|---|
| 1) | CNR Number | | **TNKR**02-000786-2022 |
| 2) | குற்றமுறையிடுபவர் மற்றும் எதிரிகள் பெயர், விலாசம் | | தமிழ்நாடு அரசுக்காக,<br>காவல் உதவி ஆய்வாளர்,<br>கரூர்நகர காவல் நிலையம்,<br>கா.நி. குற்ற எண்.865/2020.<br><br>எதிரிகளின் மீது இ.த.ச. 387 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ்.<br><br>// எதிரிகள் //<br><br>A1- சூர்யபிரகாஷ்(27/2025),<br>த/பெ.சிவசங்கரமூர்த்தி,<br>10 D, அண்ணா நகர்,<br>2 வது கிராஸ்,<br>கரூர் மாவட்டம்.<br><br>A2- முருகன்(48/2025),<br>த/பெ.கோபால்,<br>24-I,முத்துராஜபுரம்,<br>கரூர் மாவட்டம்.<br><br>A3- சீனிவாசன்(43/2025),<br>த/பெ.ரெங்கராஜ்,<br>10, முத்துராஜபுரம்,<br>கரூர் மாவட்டம். |
| 3) | குற்றம் நடந்த நாள் | | 24.07.2020 |
| 4) | முறையிட்ட நாள் | | 25.07.2020 |
| 5) | முதல் தகவல் அறிக்கை பெறப்பட்ட நாள் | | 25.07.2020 |
| 6) | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் | | A1- 25.07.2020<br>A2- 25.07.2020<br>A3- 25.07.2020 |
| 7) | எதிரிகள் முதன் முதலாக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் பட்ட நாள் | | A1- 25.07.2020<br>A2- 25.07.2020<br>A3- 25.07.2020 |

| | | | |
|---|---|---|---|
| 8) | எதிரிகள் பிணையில் விடப்பட்ட நாள் | | A1- 07.08.2020<br>A2- 07.08.2020<br>A3- 07.08.2020 |
| 9) | எதிரிகள் காவலில் இருந்த நாட்கள் | | A1- 25.07.2020 to 07.08.2020<br>A2- 25.07.2020 to 07.08.2020<br>A3- 25.07.2020 to 07.08.2020 |
| 10) | குற்றப்பத்திரிக்கை கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள் | | 09.06.2022 |
| 11) | அரசு தரப்பு வழக்கறிஞர் நிலை-2,கரூர் அவர்களின் பெயர் | | திரு. தண்டபாணி, |
| 12) | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் பெயர் | | A1- திரு. கே. சரவணன்,<br>A2& A3 - திரு. கே. கார்த்திகேயன், |
| 13) | எதிரிகளிடம் கு.வி.முச. 240-பிரிவின்படி கேள்வி கேட்கப்பட்ட நாள் | | 16.10.2025 |
| 14) | நீதிமன்றத்தால் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | | எதிரிகளின் மீது இ.த.ச. 387 மற்றும் 506(2) ஆவது பிரிவுகளின் கீழ். |
| 15) | எதிரிகளின் பதில் | | எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். |
| 16) | சாட்சிகளை முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | | (see table below) |
| 17) | அனைத்து பலதரப்பட்ட மனுக்களும் கோப்பிற்கு எடுக்கப் பட்ட நாள் -அவற்றிற்கான முடிவு, (மேல் நீதிமன்றங்களில் சேலஞ்ச் மனுக்கள் உட்பட) (routine மனுக்கள் கு.வி.மு ச. 317 போன்றவற்றை தவிர்த்து) | | இல்லை |
| 18) | எதிரிகளை கு.வி.மு.ச. 313(1) (ஆ) பிரிவின்படி வினவப் பட்ட நாள் | | 04.03.2026 |
| 19) | தலை மறைவு எதிரிகள் யாராவது இருப்பின் அவர் ஆஜரான நாள், ஆஜர் | | ஒருவருமில்லை. |

Item 16:

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1. | 24.02.2026 | 24.02.2026 |
| அ.சா.2 | 02.03.2026 | 02.03.2026 |

| | | | |
|---|---|---|---|
| | படுத்தப்பட்ட நாள் போன்ற விவரங்கள் | | |
| 20) | உயர் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள stay மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட முடிவு | | ஏதுமில்லை. |
| 21) | வழக்கில் விசாரணைக்காக உத்தரவிடப்பட்ட நாள் | | 07.07.2022 |
| 22) | விசாரணை முடிவுற்ற நாள் | | 04.03.2026 |
| 23) | நடுவரின் தீர்மானம் | | எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசுதரப்பால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை. |
| 24) | முடிவு | | எதிரிகள் குற்றம் சாட்டப்பட்டபடி குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்யப்பட்டது. |
| 25) | எதிரிகளுக்கு, இத்தீர்ப்பாணையின் இலவச நகல் வழங்கப்பட்ட நாள் | | அவ்வாறான சந்தர்ப்பம் எழவில்லை. |
| 26) | தீர்ப்பு நாள் | | 09.03.2026 |

## தீர்ப்புரை

1) கடந்த 24.07.2020 ம் தேதி 21.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் கரூர் பஸ்நிலையத்திற்கு பின்புறம் உள்ள பாலாஜி மெஸ்ஸிற்கு எதிரில் இவ்வழக்கின் வாதியான சந்திரசேகரன் என்பவர் நின்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த எதிரிகள் A1 சூர்யபிரகாஷ், A2 முருகன், A3 சீனிவாசன் ஆகிய மூன்றுபேரும் வாதியிடம் வந்து ஹோட்டல் இருக்கா என்று கேட்டுள்ளார்கள். அதற்கு வாதி லாக்டவுன் என்பதால் எல்லா கடையும் சாத்திட்டாங்க என்று சொன்னபோது எதிரி A1 சூர்யபிரகாஷீம், A2 முருகனும் அவர்கள் மறைத்து வைத்திருந்த இரண்டு தனித்தனி இரும்பு கத்தியை எடுத்து வாதியின் வலதுபக்க கழுத்தில் சூர்யபிரகாஷீம், வாதியின் இடதுபக்க கழுத்தில் முருகனும் வைத்துக்கொண்டு ஒழுங்கு மரியாதையாக உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை எடுத்துக்கொடுடா என்று மிரட்டியுள்ளார்கள். அதற்கு வாதி நீங்கள் யாரு உங்களுக்கு எதற்கு பணம் கொடுக்கனும் என்று சொன்னபோது எதிரி A1 சூர்யபிரகாஷ் எங்க மூன்றுபேர் பேரையும் கரூர்ல கேட்டா எல்லாரும் பயந்து ஓடுவாங்கடா எங்களுக்கா பணம் கொடுக்க மாட்டேன்னு சொல்ற என்று மிரட்டியுள்ளார்கள். அப்போது A3 சீனிவாசன், A1 சூர்யபிரகாஷிடம் இவன் பணம் கொடுக்கமாட்டான் கத்தியால் குத்துடா அப்பதான் பணம் கொடுப்பான் என்று மிரட்டியுள்ளார். வாதி தனது உயிருக்கு பயந்து கொண்டு தான் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.700 ஐ எடுத்து எதிரி A3 சீனிவாசனிடம் கொடுத்துள்ளார்.

எதிரிகள் மூவரும் பணத்தை வாங்கிகொண்டு வாதியைப் பார்த்து பணத்தை வாங்கியதை வெளியில் எங்காவது சொன்னீனா மூவரும் வாதியை கொலை செய்து விடுவதாக கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளார்கள். எனவே மேற்படி எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு இ.த.ச. 387, 506(2) ஆகிய பிரிவுகளின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 865/2020 ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி குற்றப்பத்திரிக்கை இந்நீதிமன்றக் கோப்பில் இவ்வழக்காக சி.சி.எண். 200/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

2) மேற்படி எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும், கு.வி.மு.ச. 207-ஆவது பிரிவுபடி எதிரிகளுக்கு வழங்கப்படவேண்டிய அரசுதரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டுள்ளது.

3) எதிரிகள் மீதான குற்ற சாராம்சம் குறித்து எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்து தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். இருதரப்பும் கேட்டும், இவ்வழக்காவணங்களை ஆராய்ந்தும், எதிரிகளின் மீது இ.த.ச. 387, 506(2) ஆவது பிரிவுகளின் படி குற்றச்சாட்டு வனைந்து வாசித்து, விளக்கிக் கூறி வினவிய போதும் எதிரிகள் அக்குற்றச்சாட்டையும் மறுத்துள்ளார்கள். எனவே, இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சி விசாரணைக்காக உத்தரவிடப்பட்டு அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் அரசுதரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 வரையான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு சான்றுபொருள் ஒன்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :-**

i) இவ்வழக்கில் அ.சா.1, தனது சாட்சியத்தில், " நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடியிருந்து தற்சமயம் கரூர் பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பாலாஜி மெஸ்ஸில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கரூர்நகர காவல்நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். அங்கு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். எழுதாத வெள்ளைத்தாளில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. **அந்த புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1**. ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில்லாத எதிரியும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என சாட்சியமளித்துள்ளார்.

ii) இவ்வழக்கில் அ.சா.2, தனது சாட்சியத்தில்,"நான் தற்போது கரூர்நகர

காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். எங்களது காவல்நிலையத்தில் பணிபுரிந்த காவல் உதவி ஆய்வாளர் கார்த்திக் அவர்களுடன் பணிபுரிந்த வகையில் அவருடைய கையெழுத்து எழுத்து நடை நன்கு பரிட்சயம் என்பதால் வழக்கு கோப்பினைப் பார்வையிட்டு அவருக்காக கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 25.07.2020 ம் தேதி 06.30 மணியளவில் உதவி ஆய்வாளர் கார்த்திக் நிலையப் பொறுப்பில் இருந்தபோது சந்திரசேகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையக் குற்ற எண்.865/2020, ச/பி 387, 506(2) இதசவின் படி வழக்கு பதிவு செய்துள்ளார். **சந்திரசேகரன் கொடுத்த அந்த புகார் அ.சா.ஆ.2 மற்றும் அந்த முதல்தகவல் அறிக்கை அ.சா.ஆ.3**. பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றையதினமே 17.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சேகர், முருகேசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5**. பின்னர் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். சம்பவம் உண்மையென தெரிய வந்ததன்பேரில் எதிரியை தேடி வந்ததில் 25.07.2020 ம் தேதி காலை 09.00 மணியளவில் எல்ஜிபி நகர் பெட்ரோல் பங்க் அருகே நின்றுகொண்டிருந்த எதிரிகள் சூர்யபிரகாஷ், சீனிவாசன், முருகன் ஆகியோரை பிடித்து விசாரித்தபோது சூர்யபிரகாஷ், சாட்சிகள் ராமகிரஷ்ணன், கதிரேஸ் முன்னிலையில் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து எதிரி எடுத்து ஆஜர்படுத்திய கத்தியை கைப்பற்றுதல்மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். **அந்த கைப்பற்றுதல்மகசர் அ.சா.ஆ.6**. பின்னர் எதிரிகளை காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **அந்த படிவம் 91 அ.சா.ஆ.7**. **அந்த கத்தி அ.சா.பொ.1**. இத்துடன் உதவி ஆய்வாளர் கார்த்திக் தனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்" என சாட்சியமளித்துள்ளார். இத்துடன் அரசுதரப்பு சாட்சி விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

6) அரசுதரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்குப் பாதகமான சாட்சியங்கள் குறித்து கு.வி.மு.ச. 313(1)(ஆ)-ஆவது பிரிவின்படி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் அவற்றை பொய்சாட்சி, பொய் வழக்கு என்றார்கள். எதிரிகள் தன்னுடைய தரப்பில் விசாரிக்க சாட்சிகள் எவரும் இல்லை என்றார். இத்துடன் எதிரிகள் தரப்பு சாட்சியம் முடித்துக் கொள்ளப்பட்டது.

7) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இவ்வழக்கில் முன் வைக்கப்பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.

8) இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரிகளின் மீது

இ.த.ச. 387, 506(2) ஆவது பிரிவுகளின் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டை அரசுதரப்பால் தகுந்த முறையான ஐயப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

**<u>பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

9) அரசு தரப்பில், கடந்த 24.07.2020ம் தேதி 21.00 மணிக்கு கரூர்நகர காவல்நிலைய சரகம் கரூர் பஸ்நிலையத்திற்கு பின்புறம் உள்ள பாலாஜி மெஸ்ஸிற்கு எதிரில் இவ்வழக்கின் வாதியான சந்திரசேகரன் என்பவர் நின்று கொண்டிருந்தபோது அப்போது அங்கு வந்த எதிரிகள் A1 சூர்யபிரகாஷ், A2 முருகன், A3 சீனிவாசன் ஆகிய மூன்றுபேரும் வாதியிடம் வந்து ஹோட்டல் இருக்கா என்று கேட்டுள்ளார்கள். அதற்கு வாதி லாக்டவுன் என்பதால் எல்லா கடையும் சாத்திட்டாங்க என்று சொன்னபோது எதிரி A1 சூர்யபிரகாஷும், A2 முருகனும் அவர்கள் மறைத்து வைத்திருந்த இரண்டு தனித்தனி இரும்பு கத்தியை எடுத்து வாதியின் வலதுபக்க கழுத்தில் சூர்யபிரகாஷும், வாதியின் இடதுபக்க கழுத்தில் முருகனும் வைத்துக்கொண்டு ஒழுங்கு மரியாதையாக உன் பாக்கெட்டில் இருக்கிற பணத்தை எடுத்துக்கொடுடா என்று மிரட்டியுள்ளார்கள். அதற்கு வாதி நீங்கள் யாரு உங்களுக்கு எதற்கு பணம் கொடுக்கனும் என்று சொன்னபோது எதிரி A1 சூர்யபிரகாஷ் எங்க மூன்றுபேர் பேரையும் கரூர்ல கேட்டா எல்லாரும் பயந்து ஓடுவாங்கடா எங்களுக்கா பணம் கொடுக்க மாட்டேன்னு சொல்ற என்று மிரட்டியுள்ளார்கள். அப்போது A3 சீனிவாசன், A1 சூர்யபிரகாஷிடம் இவன் பணம் கொடுக்கமாட்டான் கத்தியால் குத்துடா அப்பதான் பணம் கொடுப்பான் என்று மிரட்டியுள்ளார். வாதி தனது உயிருக்கு பயந்து கொண்டு தான் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.700ஐ எடுத்து எதிரி A3 சீனிவாசனிடம் கொடுத்துள்ளார். எதிரிகள் மூவரும் பணத்தை வாங்கிகொண்டு வாதியைப் பார்த்து பணத்தை வாங்கியதை வெளியில் எங்காவது சொன்னீனா மூவரும் வாதியை கொலை செய்து விடுவதாக கத்தியைக் காட்டி மிரட்டியுள்ளார்கள். எனவே மேற்படி எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு இ.த.ச. 387, 506(2) ஆகிய பிரிவுகளின் படியும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கரூர்நகர காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் காவல் நிலைய குற்ற எண். 865/2020ல் எதிரிகளின் மீது குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே அரசு தரப்பில் சுமத்தப்பட்ட குற்றத்தினை நிரூபிக்கும் முகமாக அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களையும், சான்றாவணங்களையும் மற்றும் இருதரப்பு வாதங்களையும் பின்வருமாறு பரிசீலிக்கப்பட்டது.

10) இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில், “நான் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடியிருந்து தற்சமயம் கரூர் பஸ்ஸ்டாண்ட் அருகிலுள்ள பாலாஜி மெஸ்ஸில் கேசியராக பணிபுரிந்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை. சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கரூர்நகர காவல்நிலையத்தில் இருந்து என்னை அழைத்தார்கள். அங்கு என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். எழுதாத வெள்ளைத்தாளில் நான் கையொப்பம் செய்தேன். வழக்கைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. ஆஜர்

எதிரிகளை எனக்கு தெரியாது. ஆஜரில்லாத எதிரியும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை" என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளார்.

11) மேற்படி இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும் நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1ன் சாட்சியத்தை ஆராய்கையில், அவர் தனது முதல் விசாரணை சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் இந்த வழக்கைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கரூர்நகர காவல்நிலையத்தில் இருந்து தன்னை அழைத்தார்கள் என்றும் அங்கு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும் எழுதாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில் ஆஜர் எதிரிகள்தான் சம்பவ தினத்தன்று அ.சா.1 ஐ தகாத கத்தியைக் காட்டி கொலைமிரட்டல் விடுத்தார்களா என்பதும் அ.சா.ஆ.1 புகார் மனுவை அ.சா.1 தான் எழுதிக்கொடுத்தாரா என்பதும் சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

12) மேலும், இவ்வழக்கின் பாதிக்கப்பட்டவரும், நிகழ்வுநிலை புகார்தாரருமான அ.சா.1 சந்திரசேகரன் பிறழ் சாட்சியம் அளித்துள்ள சூழ்நிலையில் மற்ற சாட்சிகளை விசாரிப்பதில் பயனில்லை என்பதால் மற்ற சாட்சிகளை விசாரிப்பதிலிருந்து அரசு தரப்பில் விலக்கு செய்யப்பட்டுள்ளனர். மேலும் புலன் விசாரணை அதிகாரி சார்பாக அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்ட உதவி ஆய்வாளர் திரு. இளங்கோ, இவ்வழக்கு குறித்து புலன் விசாரணை செய்த ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகளின் மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ள போதிலும், புகார்தாரரே ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் இந்த வழக்கைப் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் சுமார் 6 வருடங்களுக்கு முன்பு கரூர்நகர காவல்நிலையத்தில் இருந்து தன்னை அழைத்தார்கள் என்றும் அங்கு தன்னிடம் கையொப்பம் கேட்டார்கள் என்றும் எழுதாத வெள்ளைத்தாளில் தான் கையொப்பம் செய்தேன் என்று கூறி பிறழ்சாட்சியம் அளித்துள்ளநிலையில், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை மட்டும் வைத்து எதிரிகள் குற்றவாளிகள் என முடிவு செய்ய இயலாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே,எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என முடிவு செய்து, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

13) முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 387, 506(2) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

14) இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 107/2020, அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 29.5 செ.மீ நீளமுள்ள கருப்பு கலர் பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து - தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்தில் வடிக்கப்பட்டு, பின்னர் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 09.03.2026 ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.09 19:44:01 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

**<u>அரசுதரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.1 | சந்திரசேகரன் |
| அ.சா.2 | திரு. இளங்கோ, காவல் உதவி ஆய்வாளர் |

**<u>அரசுதரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் |
| அ.சா.ஆ.2 | புகார் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல்மகசர் |
| அ.சா.ஆ.7 | படிவம் 91 |

**<u>அரசுதரப்பு சான்று பொருள் :-</u>**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | சுமார் 29.5 செ.மீ நீளமுள்ள கருப்பு கலர் பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி-1 (**ஆர்.பி.எண். 107/2020**) |

**<u>எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருள்கள் :-</u>**

**இல்லை**

BARATH KUMAR
Digitally signed by BARATH KUMAR
Date: 2026.03.09 19:44:12 +0530

**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**

| | | |
|---|---|---|
| 09.03.2026<br><br>**சிசி.எண்.** 200/2022<br><br>எதிரிகள் ஆஜர். இவ்வழக்கில் முன் வைக்கப் பட்ட வாய் மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது.<br><br>தீர்ப்பு அவையறியப் பகரப்பட்டது.<br><br>முடிவில், மேற்படி அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களில் இருந்தும் எதிரிகளின் மீது சாட்டப்பட்ட இ.த.ச. 387, 506(2) ஆவது பிரிவுகளின் படியான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என முடிவு கண்டு சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகளை கு.வி.மு.ச. 248(1)-ஆவது பிரிவின்படி **விடுதலை செய்து** இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>இவ்வழக்கில் வழக்குச் சொத்தாக குறியீடு செய்யப்பட்டுள்ள **ஆர்.பி.எண். 107/2020, அ.சா.பொ.1** ல் கண்டுள்ள சுமார் 29.5 செ.மீ நீளமுள்ள கருப்பு கலர் பிளாஸ்டிக் கைப்பிடியுடன் கூடிய இரும்பு கத்தி ஒன்றினை மேல்முறையீட்டுக் காலக்கெடுவிற்குப் பின்னிட்டு உரிய முறையில் அழிக்க உத்தரவிடப்படுகிறது.<br><br>BARATH KUMAR Digitally signed by BARATH KUMAR Date: 2026.03.09 19:44:23 +0530<br>**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்.** | | |